டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 3.03.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 209 - Madurai | Online Edition

# இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டின் மூலம் பெரும் முதலீடு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன

புது தில்லி, மார்ச் 3

கடந்த 16.02.26 முதல் 21.02.26 வரை நடைபெற்ற இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு 2026 உலக ளாவிய செயற்கை நுண்ணறிவு சூழலில் சிறப்புமிக்க மைல் கல்லாக அமைந்தது. இந்த உச்சி மாநாட்டில் நேரடியாக சுமார் 6 லட்சம் பேர் பங்கேற்றனர். நேரடி மெய்நிகர் காட்சி வாயிலாக 9 லட்சத்திற்கும் மேற்பட்ட கருத்துக்கள் பெறப்பட்டது. இந்த உச்சி மாநாட்டில் 100-க்கும் அதிகமான நாடுகள் மற்றும் 20 சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த உச்சி மாநாட்டின்போது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துவது தொடர்பான இயக்கத்தில் 24 மணி நேரத்தில் 2.5 லட்சத்திற்கும் அதிக மானவர்கள் பங்கேற்று உறுதிமொழி ஏற்றது, இந்தியாவின் கின்னஸ் உலக சாதனையாக அமைந்தது.

இந்த உச்சி மாநாட்டின் மூலம், உள்கட்டமைப்பு, வன்பொருள், செயலிகள் போன்ற துறைகளில் 200 பில்லியனுக்கும் மேலான அமெரிக்க டாலர் அளவிற்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த உள்கட்டமைப்புத் துறையில், 7 ஆண்டுகளில் 110 பில்லியன் அமெரிக்க டாலரை முதலீடு செய்ய ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் உறுதி ஏற்றுள்ளது. 2035ம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக அதானி எண்டர்பிரைஸஸ் நிறுவனம் அறிவித்தது.

செயற்கை நுண்ணறிவு தயார் தரவு மையங் களுக்காக டாடா குழுமம் ஓபன் ஏ.ஐ நிறுவனத்துடன் கூட்டாண்மையை அறிவித்துள்ளது.

# ‘கறவை மாடு வளர்ப்பு‘ இலவசப் பயிற்சி

கரூர், மார்ச் 3

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ‘கறவை மாடு வளர்ப்பு‘ பற்றிய ஒரு நாள் உள்வளாக பயிற்சி 04.03.26 (புதன்கிழமை) அன்று இலவசமாக அளிக்கப்படவுள்ளது.

விவசாயிகள் / கால்நடை பண்ணையாளர்கள் / கறவை மாடு வளர்ப்பில் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்து கொண்டு கறவை மாடு வளர்ப்பு தொடர்பாக தங்களுக்கு உள்ள சந்தேகங் களுக்கு தெளிவு பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்பயிற்சியில் அறிவியல் ரீதியான கறவை மாடு வளர்ப்பில் பராமரிப்பு முறைகளான இனங்களை தேர்வு செய்தல், பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, கலப்பு தீவனம் தயாரித்தல், பசுந்தீவன உற்பத்தி, அசோலா வளர்ப்பு, தூய்மையான பால் உற்பத்தி, கறவை மாடுகளை தாக்கும் நோய்கள் அவற்றை தடுக்கும் முறைகள் மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்களால் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் நேரிலோ அல்லது எமது அலுவலக தொலைபேசி எண். 04324 294335, அலைபேசி எண் மற்றும் வாட்ஸ் அப் எண். மூலம் 73390 57073, தொடர்பு கொண்டு 03.03.26 அன்று மாலை 5.00 மணிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

மேலும், இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 04.03.26 (புதன்கிழமை) அன்று காலை 10.30 மணிக்கு எமது பயிற்சி மைய வளாகத்திற்கு வந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத் திற்கான பயிற்சி, 06.03.26 வெள்ளிக்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி : 0422 – 6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய அறிவியல் தினம்




கோயம்புத்தூர், மார்ச் 3

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) கோயம்புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் (CPMB&B) 28.02.26 அன்று அண்ணா அரங்கத்தில் தேசிய அறிவியல் தினம் வெற்றிகரமாக நடத்தியது. இரண்டு நாள் கொண்டாட்டத்தில் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் தீவிரமாக பங்கேற்றன. அறிவியல் விழிப்புணர்வு, புதுமை மற்றும் ஆராய்ச்சி சிறப்பை ஊக்குவித்தன.

நோபல் பரிசு பெற்ற சர் சி.வி.ராமனால் கண்டுபிடிக்கப்பட்ட ராமன் விளைவை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 அன்று தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் 2015 முதல் தேசிய அறிவியல் தினத்தைக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு நிகழ்ச்சி 'அறிவியலில் பெண்கள் : விக்ஸித் பாரதத்தை ஊக்குவிப்பது' என்ற கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டது.

இது இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதில் பெண் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது. இந்த நிகழ்வில் 3 இணைப்புக் கல்லூரிகள், 6 உறுப்புக் கல்லூரிகள், 5 தனியார் கல்லூரிகள் உட்பட 14 கல்லூரிகள் பங்கேற்றன.

இரண்டு நாட்களில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகள் மற்றும் தேசிய அளவிலான கருத்தரங்கில் கிட்டத்தட்ட 600 கல்லூரி மாணவர்கள் தீவிரமாக பங்கேற்றனர்.

இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பிப்ரவரி 6 ஆம் தேதி பள்ளி அளவிலான போட்டிகள் ஆரம்ப நிகழ்வுகளாக நடத்தப்

பட்டன. இதில் சொற்பொழிவு, கட்டுரை எழுதுதல், அறிவியல் வினாடி வினா, கேன்வாஸ் ஓவியப் போட்டிகள் போன்ற போட்டிகள் இடம் பெற்றன. பள்ளி அறிவியல் கண்காட்சியில் 9 பள்ளிகள் மற்றும் சுமார் 60 மாணவர்கள் தங்கள் அறிவியல் புரிதல் மற்றும் படைப்பாற்றலை நிரூபிக்கும் புதுமையான மாதிரிகள் மற்றும் திட்டங்களை காட்சிப்படுத்தினர். 28.02.26 பள்ளி அளவிலான கண்காட்சிகள் மற்றும் கல்லூரி மாணவர் போட்டிகளுடன் தேசிய அறிவியல் தின கொண்டாட்டங்களின் தொடர்ச்சியைக் குறித்தது. அறிவியல் கண்காட்சியில் 9 பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவர்கள் வழங்கிய புதுமையான மாதிரிகள் காட்சிப்படுத்தப் பட்டன.

ஸ்டாண்ட்-அப் சயின்ஸ், மீம்ஸ், அகார் ஆர்ட், பயோஸ்னாப்பிங், லோகோ ஃபெஸ்ட், மெமரிமேனியா, உள்ளிட்ட பல்வேறு ஈடுபாட்டுமிக்க கல்லூரி போட்டிகள் நடத்தப் பட்டன. இந்த நிகழ்வுகள் அறிவியல் அறிவை படைப்பாற்றல், தகவல் தொடர்பு மற்றும் குழுப்பணியுடன் இணைத்தன. பிற்பகல் 4.00 மணிக்கு அண்ணா அரங்கத்தில் நிறைவு விழா நடைபெற்றது. மூன்றாம் பி.டெக் (உயிரித் தகவலியல்) பி.கோகுல ஸ்ரீ வரவேற்பு உரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதைத் தொடர்ந்து விரிவான நிகழ்வு அறிக்கையை வழங்கினார். நிறைவு அமர்வில் மத்திய மாநில வன சேவை அகாடமியின் முதல்வர் வி. திருநாவுக்கரசு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியில் அறிவியல் அறிவின் பங்கை வலியுறுத்தி உரையாற்றினார்.

பரிசு வழங்கும் விழா, முனைவர் வெங்கடேசன் (தோட்டக் கலை) இயக்குநர், முனைவர் P.பாலசுப்பிரமணியன் (NRM) மதிப்புமிக்க ஒட்டு மொத்த பள்ளி சாம்பியன் ஷிப் கோப்பையை, கோய-ம்புத்தூரில் உள்ள SBOA பள்ளிக்கு வழங்கினார். கோவையில் உள்ள தர்ம சாஸ்த்ரா பள்ளி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. மேலும் பல்வேறு கல்லூரிப் போட்டிகளுக்கான பரிசு களும் வழங்கப்படுகின்றன. மூன்றாம் பி.டெக் (உயிரிதொழில் நுட்பவியல்) N.அகத்தியன் நன்றி தெரிவித்ததன் மூலம் நிகழ்ச்சி நிறை வடைந்தது. தேசிய அறிவியல் தினம் வெற்றிகரமான நடத்தை, அறிவியல் விசாரணை, புதுமை, உள்ளடக்கம் மற்றும் ஆராய்ச்சி சிறப்பை ஊக்குவிப்பதற்கான தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் CPM B&B-யின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த நிகழ்வு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்தமாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், அறிவைப் பரிமாறிக் கொள்ளவும், வளர்ந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த அறிவியல் ஆய்வு உணர்வை வளர்க்கவும் ஒரு சிறப்பான தளத்தை வழங்கியது.

# என் பயிரில் அதிக மகசூல் பெற விதை தரம் அறிந்து விதைப்பு மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகளுக்கு யோசனை

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்பா, தாளடி நெல் அறுவடைக்கு பின்பு எள் பயிர் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆகவே விவசாயிகள் எள் விதைகளை பரிசோதனை செய்து தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறலாம் என்று தஞ்சாவூர் சரக விதை பரிசோதனை அலுவலா் து.சிவவீர பாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதா தேவி மற்றும் செ.பிரசன்னா ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

தரமான விதைகளை பயன்படுத்துவதால் குறைந்த விதைகள், சீரான பயிர் எண்ணிக்கை, ஒருமித்து பூக்கும் தன்மை, முதிர்ச்சி பருவம் மற்றும் குறைந்த பூச்சி நோய் தாக்குதல் உள்ளிட்ட நன்மைகள் ஏற்படும்.

எனவே விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள எள் விதை களின் முளைப்புத்திறன் குறைந்தத பட்சம் 80 சதவீதமும், புறத்தூய்மை 97 சதவீதமும், அதிகபட்ச ஈரப்பதம் 9 சதவீதமும் இருக்கிறதா?என்பதை பரிசோதனை செய்து விதைப்பதால் அதிக மகசூல் பெறலாம்.

இதற்காகமாவட்ட விதைப்பரிசோதனை நிலையம், எண் 15, காளியம்மன் கோவில் தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் என்ற முகவரிக்கு விவசாயிகள் விதைகளை பரிசோதனைக்கு அனுப்பி ஆய்வு செய்து விதைக்க வேண்டும்.

எள் பயிரில் முளைப்புத்திறன் அறிய 100 கிராம் விதையினை ஒரு பையில் போட்டு, பயிர், ரகம் விவசாயியின் முகவரி ஆகிய வற்றை எழுதி, ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/- கட்டணம் செலுத்தி, விதைப்பரிசோதனை செய்த பிறகு தரமான விதைகளை சாகுபடி செய்து விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்து உள்ளார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஆட்டுப்பண்ணையில் பொருளாதார இழப்பை தவிர்க்க புறஒட்டுண்ணிகளின் மேலாண்மை

ஆட்டு பண்ணைகளில் ஒன்றல்லது அதற்கு மேற்பட்ட புறஒட்டுண்ணிகள் ஆடுகளின் மேல் இருப்பின் அவை உடல்நலன் பாதிப்பு மற்றும் பொருளாதார இழப்பை ஏற்படுத்து கின்றன. ஆடுகளில் காணப்படும் முக்கியமான புற ஒட்டுண்ணிகள் முறையே பேன், சொறிபூச்சி, தெள்ளுப்பூச்சி மற்றும் ஒட்டுண்ணி ஆகியவை ஆகும். இவை அனைத்தும் ஊட்டச்சத்து இல்லாத மற்றும் ஆரோகியமற்ற, வாழ்வாதாரத் திற்கு அடிப்படை வசதியில்லாத பகுதி மற்றும் அதிகமான உருபடிகள் கொண்ட ஆட்டுப்பண்ணையில் காணப்படுகின்றன.

**பேன்**

குளிர்காலங்கள், மழை காலங்களில் மற்றும் வெயில் காலங்களில் ஆடுகளில் அழற்சி அல்லது நோய் எதிர்ப்பு சக்கி குறையுமாயின் மற்றும் அக ஒட்டுண்ணிகளின் தாக்கம் மிகுத்து இருப்பின் இந்த புறஒட்டுண்ணிகளினால் ஏற்படும் இழப்பு அதிகமான இருக்கும். பேனானது ரோமம் வெளிரிய, முடிகள் முடிச்சுபோட்ட இடங்களில் மற்றும் தொடர்ந்து அரிப்பை ஏற்படுத்தும் உடல் பகுதிகளில் காணப்படும். ஆட்டின் முடியை விலக்கி பார்த்தோமேயானால் பேன்கள் உடல் மற்றும் முடியின் மேல் ஊர்ந்து செல்வதைக் காணலாம். பேன் இருப்தை கட்டுப் படுத்தவில்லை எனில் அரிப்பு, பொடுகு, புண்கள், இரத்தசோகை இறுதியில் இறப்பும் நேரிடலாம். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பேன்களை அகற்ற சிகிச்சையளிக்க வேண்டும்.

**புறஒட்டுண்ணி**

புறஒட்டுண்ணியானது உடலின் இரத்தம் உறிபவை. இவை நேரடியாகவோ மறைமுகமாகவோ பொருளாதார மற்றும் உயிர் இழப்பை ஏற்படுத்துகின்றன. புறஒட்டுண்ணியால் உடலின் தசைபாதிப்பு, அரிப்பு, அழற்சி, அதிக உணர்திறன், சீழ்க்கட்டி, உடல் எடை குறைதல், கால் தாங்குதல், இரத்த சோகை மற்றும் நாள்பட்ட, மோசமான நிலையில் இறப்பு ஏற்படுகிறது. ஆடுகளில் புறஒட்டுண்ணியின் தாக்கத்தால் நேரடியிழப்பாக உடல் சோர்வு, தோலில் சேதாரம், இரத்த இழப்பு மற்றும் இரத்த சோகை, ஒவ்வாமை மற்றும் நாள்பட்ட அழுத்தும், நோய் எதிர்ப்பு சக்தி

குறைதல் ஆகிறவை ஏற்படும். எதிர்மறையாக வைத்திய செலவு மற்றும் ஒட்டுண்ணி நீக்க செலவு, ஒட்டுண்ணி மூலம் பரவும் நோய்கள் தாக்கத்தை குறைக்க ஆகும் செலவு ஆகியவை ஏற்படும். வெயில் மற்றும் வசந்த காலத்தில் ஒட்டுண்ணிகளின் தாக்கம் அதிகமாகவும், மழை மற்றும் பனி காலங்களில் வெப்ப நிலை குறைவதால் இவற்றின் தாக்கம் குறைவாக இருக்கும்.

### புறஒட்டுண்ணி மேலாண்மை

ஒட்டுண்ணி கொல்லிகளை மருந்து தொளிப்பான ஆடு களின் மீது தெளித்து ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்த லாம். இவற்றை தெளிப்பான், முக்கியெடுத்தல் மற்றும் சொட்டு மருந்தாக உடலின் மீது வைத்து கட்டுப்படுத்தலாம். பெர்மெத் தரின் குளோரோபைரிபாஸ் ஆகிய வகையான ஒட்டுண்ணி கொல்லிகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி உபயோகிக்கலாம். மருந்து சுழற்சியை மேற்கொண்டால் ஒட்டுண்ணி எதிர்ப்பு ஏற்படாமல் தவிர்க்கலாம். இயற்கை முறையிலும் அகஒட்டண்ணிகளை கட்டுப்படுத்தலாம்.



ஆட்டின் காதில் அகஒட்டுண்ணி தாக்கம்

### தெள்ளுப் பூச்சி

தட்டையாக, இறக்கைகள் அற்று பழுப்பு நிறத்தில் துள்ளி துள்ளி ஆடுகளின் உடல் மீது இருப்பவை. இளங்குட்டிகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்த கூடியவை. குறிப்பாக அதிக இரத்த சோகை காரணமாக குட்டிகள் இறக்கநேரிடும். மேலும் இவை குறிப்பிட்ட நேரம் மட்டும் ஆடுகளின் உடலின் மீது இரத்தம் உறிஞ்சி ஒட்டிக்கொண்டு இருப்பவை. இரண்டு முதல் மூன்று வாரங்களில் அதன் வாழ்க்கை சுழற்சி அமைந்திருக்கும். முட்டைகளை ஆட்டின் உடலின் மீதுயிட்டாலும், தரையில் விழுந்து 2 நாட்களிலிருந்து பல வாரங்களில் மீண்டும் அவை பொறித்து பெரியவையாக உருவெடுக்கின்றன. முகம், காது போன்ற பகுதிகளில் மிகுதியாகவும் மற்ற பகுதிகளிலும் இருக்கும். அரிப்பு, தோல் மற்றும் உரோமம் கொட்டுதல் அதிகமாக இருக்கும். இதத்தசோகை, உடல் எடை குறைதல், காயங்கள், பால் அளவு குறைதல், மற்ற நேய்தொற்று சில சமயங்களில் இறப்பு நேரிடும்.





**ஆகஒட்டுண்ணி மற்றும் தெள்ளுப் பூச்சியின் தாக்கம்**

**ஆட்டுப்பண்ணையில் புறஒட்டுண்ணிகளின் மேலாண்மை**

- ஆட்டு பண்ணையை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்

- பிறந்த குட்டிகளை தூசு படிந்த இடத்தில் அல்லது கோணிபை அல்லது சாக்கு பைகளின் மீது படுக்கவைத்து பராமரிக்க கூடாது.

- ஆகஒட்டுண்ணிக்கு அமிட்டிராஸ் அல்லது டெல்டாமெத்திரீன் பேன் மருந்துகளை தெளிப்பானாக அல்லது தண்ணீரில் கலந்து ஆடுகளை முக்கி (தலைகுதியை தவிர்த்து) எடுக்க வேண்டும்

- வசம்பு மற்றும் வேப்ப எண்ணெய் கலந்து ஆடுகளின் மேல் தடவி விடலாம்.





**ஆடுகளில் புறஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்த வசம்பு மற்றும் வேப்ப எண்ணெய் கலந்த கழுத்துபட்டை அணிவித்தல்**

- மருந்து குளியல் கொடுக்கலாம் (3 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஆட்டு பட்டியில் மாதம் ஒரு முறை தெளிக்கலாம்).

ஆடுகளின் மேல் தெளிக்கும் போது 1 மில்லி மருந்தை 3 லிட்டர் தண்ணீரில் கலந்து மருந்து குளியல் அளிக்கலாம்.

இவ்வாறாக புறஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தினோமேயானால் ஆடுகளுக்கு இரத்த சோகை ஏற்படுவதையும், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பையும் கட்டுப்படுத்தலாம்.

மேலும் ஆடுகளின் உடல் எடை அதிகரிப்பதால் ஆட்டுப் பண்ணையில் இலாபம் ஈட்டலாம்.

தகவல் : **முனைவர் மா.வெங்கடேசன், மரு. அ.ரேஸ்மா, முனைவர் அ.தங்கமணி முனைவர் சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.**



# தரமான பருத்திக்கு 'கஸ்தூரி சான்று' மத்திய அரசு அறிமுகம்



மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும் இந்திய பருத்திக் கழகம் சார்பில் நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினாலும் தமிழகத்தில் விளைகின்ற பருத்திக்கு நிலையான கட்டுபடியான விலை கிடைக்காதது பின்னைடைவு ஏற்படுத்துகிறது.

தற்போது உற்பத்தி முதல் விற்பனை வரை பருத்திக்கு தேவையான அனைத்து பணிகளும் ஒருங்கிணைந்த துறை களுடன் ஒருங்கிணைந்து 'கஸ்தூரி காட்டன் பாரத்' என்னும் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

**இந்த திட்டத்தில் என்ன துறைகள் ஒருங்கிணைந்து உள்ளனர்? தெரியுமா?**

இத்திட்டத்தில் ஜவுளி அமைச்சகம், இந்திய பருத்திக்கழகம் (CCI) ஜவுளி ஏற்றுமதி மேம்பாட்டுக்குழு, இந்திய ஜவுளித்துறை சங்கங்கள், ஜவுளி தொழில்துறையுடன் விவசாயிகள் ஒருங் கிணைக்கப்பட்டு உள்ளனர்.

**எப்படி சான்று வழங்கப்படுகிறது?**

அறுவடை சீசன் துவங்கியதும் வேளாண்மைத்துறை உள்ளடக்கிய சிறப்பு குழுவினர் நேரடியாக பருத்தி வயலை ஆய்வு செய்து 'பருத்தி நூலிழை நீளம் 35 மி.மீட்டருக்கு அதிகமாக இருந்தால் 'கஸ்தூரி காட்டன் பாரத்' என சான்று வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடி செய்யப்படும் விவசாயிகளை தேர்வு செய்து வேளாண் துறை மற்றும் ஜவுளித்துறை சங்கத்தின் வாயிலாக தரமான பருத்தி உற்பத்திக்கு தேவையான வழிகாட்டுதல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**இந்த சான்றால் என்ன பயன்?**

இந்த சான்று (CERTIFICATION), கிடைப்பதால் பருத்தியின் தரம் உறுதியாகி ஏற்றுமதிக்கு உகந்த பருத்தியாக கருதுப்படும்.

ஏற்றுமதி மேம்பாட்டு குழுவும் இத்திட்டத்தில் ஒருங்கிணைக்க பட்டுள்ளதால் எளிதாக இந்த கஸ்தூரி காட்டன் பாரத் பருத்தி ஏற்றுமதிக்கு நிறைய வாய்ப்புள்ளதாகும்.

இந்த திட்டத்தை அமுல்படுத்த சிமா பருத்தி அபிவிருத்தி & ஆராய்ச்சி நிலையம் வாயிலாக பருத்தி சாகுபடி செய்யப்படும் பகுதிகளை தேர்வு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# TNAU பயிர் பூஸ்டர் குறித்த பயிற்சியில் வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3 கோவிலாங்குளம் கிராமத்தில் TNAU பயிர் பூஸ்டர் குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த பயிற்சியை மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில்பயிலும் மாணவி சுபீதா நடத்தினார். அவர் TNAU பயிர் பூஸ்டரின் பயன்பாடுகள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து தெளிவாக விளக்கினார்.

இது பயிர் வளர்ச்சியை அதிகரிக்கவும், ஊட்டச்சத்து உட்கொள்ளுதலை மேம்படுத்தவும், விளைச்சலை உயர்த்தவும் உதவுகிறது என்று கூறினார். விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, பயன்படுத்தும் முறைகள் குறித்து சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றனர். இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# கரும்பு சாகுபடியில் நோய்க்கட்டுப்பாடு விவசாயிகளுக்கு 'வெந்நீர் சிகிச்சை' செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



திண்டுக்கல், மார்ச் 3

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஒன்றியம் பள்ளபட்டி கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் கரும்பு விவசாயி களுக்கான தொழில்நுட்ப விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண் மாணவி ஐஸ்வர்யா நாயர், கரும்பு சாகுபடியில் விதைக்கரணைகள் மூலம் பரவும் நோய்களைத் தடுக்கும் வெந்நீர் சிகிச்சை (Hot Water Treatment) முறை குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கம் மற்றும் செயல்முறை விளக்கமளித்தார்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**


**நோய் மேலாண்மை :** கரும்பைத் தாக்கும் செவ்வழுகல் நோய் (Re-Rot) மற்றும் குருத்துக்கருகல் போன்ற நோய்களை ஆரம்பத்தி லேயே தடுக்க விதைக்கரணைகளைச் சுத்திகரிப்பதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது.

**சிகிச்சை முறை :** கரும்பு கரணைகளை குறிப்பிட்ட வெப்ப நிலையில் (சுமார் 50°C) வெந்நீரில் நனைத்து எடுப்பதன் மூலம் பூஞ்சாணத் தொற்றுக்கள் அழிக்கப்படுவது செயல்முறை விளக்க மாகக் காண்பிக்கப்பட்டது.

**மகசூல் அதிகரிப்பு :** இம்முறையைப் பின்பற்றுவதால் முளைப்புத் திறன் அதிகரிப்பதோடு, பயிர்கள் ஆரோக்கியமாக வளர்ந்து கூடுதல் மகசூல் கிடைக்க வழிவகுக்கும் என மாணவி தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு முகாமில் நிலக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, கரணை களைத் தேர்வு செய்யும் முறைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை வேளாண் கல்லூரி மாணவிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.


கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காச்சோளம் மேக்சிம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

தூத்துக்குடி, மார்ச் 3

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அருகே, குமாரகிரி கிராமத்தில் வேளாண் பணி அனுபவ திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி கிள்ளிகுளம் வ.உ.சி வேளாண்மை கல்லூரி மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதில் கோவில்பட்டி உதவி வேளாண்மை இயக்குநர் மணி கண்டன், வேளாண்மை அலுவலர்கள் பாமா, மணிராஜ், உதவி வேளாண்மை அலுவலர் ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சியில் மண் பரிசோதனையின் முக்கியத்துவம், மண் மாதிரியை சேகரிக்கும் வழிமுறைகள், உயிர் உரம் மற்றும் பசுந்தாள் உரங்களின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைததனர். இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) அறிமுகப் படுத்தியுள்ள மக்காச்சோள விளைச்சலை அதிகரிக்கும் 'மக்காச் சோளம் மேக்சிம்' (Maize Maxim) என்ற நுண்சத்து கலவையின் முக்கியத்துவத்தை விளக்கினர். இது மக்காச்சோளப் பயிருக்குத் தேவையான அனைத்து முக்கிய நுண்ணூட்டச் சத்துக்களையும் சரிவிகிதத்தில் வழங்குகிறது. மக்காச்சோளம் பயிரிடும்போது பொதுவாக தூர் கட்டுதல் மற்றும் கதிர் பிடிக்கும் பருவத்தில் சத்துக் குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அதைத் தவிர்க்க இந்த கலவை பயன்படுகிறது, இதனைப் பயன்படுத்துவதன் மூலம் தானிய விளைச்சல் 15% முதல் 20% வரை அதிகரிக்கிறது. பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளர உதவுகிறது.

## பயன்படுத்தும் முறை

மக்காச்சோளம் மேக்சிமை நிலத்தில் நேரடியாகப் போடுவதை விட, இலைவழித் தெளிப்பாக (Foliage Spray) பயன்படுத்துவது

தான் அதிக பலனைத் தரும். ஒரு ஏக்கருக்கு 3 கிலோ மக்காச் சோளம் மேக்சிம் தேவைப்படும். இதை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒட்டும் திரவம் (Sticker/Wetting agent) சிறிதளவு சேர்ப்பது மருந்து இலைகளில் நன்கு ஒட்ட உதவும். சிறந்த பலனைப் பெற இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

**முதல் தெளிப்பு :** பயிர் நட்ட 25 முதல் 30 நாட்களில் (பயிர் வளர்ச்சிப் பருவம்).

**இரண்டாவது தெளிப்பு :** பயிர் நட்ட 45 முதல் 50 நாட்களில் (பூக்கும் அல்லது கதிர் வரும் பருவம்).

**முக்கிய குறிப்புகள்**

**நேரம் :** காலை அல்லது மாலை வேளைகளில் தெளிப்பது சிறந்தது. கடும் வெயில் நேரத்தில் தெளிப்பதைத் தவிர்க்கவும்.

**மண்ணின் ஈரப்பதம் :** நிலத்தில் போதிய ஈரப்பதம் இருக்கும் போது தெளித்தால் சத்துக்கள் விரைவாக உட்கொள்ளப்படும்.

**கிடைக்குமிடம் :** உங்கள் பகுதிக்கு அருகிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) அல்லது TNAU ஆராய்ச்சி மையங் களில் இது கிடைக்கும். மக்காச்சோள மேக்சிம் பயன்படுத்து வதால் கதிர்கள் பெரியதாகவும், மணிகள் எடை அதிகமாகவும் மாறும் என்பது விவசாயிகளின் அனுபவபூர்வமான உண்மை.

## தயிர் தாமிர கரைசல் செய்முறை பற்றி விவசாயியிடம் வேளாண்மை பயிலும் மாணவர்கள் விளக்கம்

திருச்சி, மார்ச் 3



திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் குகழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் தயிர் தாமிர கரைசல் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளிடம் தயிர் மற்றும் தாமிரக் கம்பியை உபயோகித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். இது தழைச்சத்தை அதிகரிப்பதற்காகவும் பூஞ்சை காளான் எதிர்ப்பு திறனை மேம்படுத்துவதற்காகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

# தென்னையில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த அந்து உருண்டை வேளாண் கல்லூரி மாணவி விளக்கம்




திண்டுக்கல், மார்ச் 3

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், வீலிநாயக்கன்பட்டி கிராமத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவி K.A.அபிசயா, விவசாயிகளுக்கு தென்னையில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த அந்து உருண்டை பயன்படுத்தும் முறையை செயல்முறை விளக்கத்துடன் விளக்கினார்.

இதில் நாப்தலீன் பால் எனப்படும் அந்து உருண்டையை பயன்படுத்துவதன் மூலம் வண்டுகள் மரத்தில் தங்காமல் விரட்டப்படுவதும், இளம் குருத்து சேதம் குறைந்து மர வளர்ச்சி பாதுகாக்கபடுவதும் நேரடி செயல்முறையால் விளக்கப்பட்டது. மேலும், குறைந்த செலவில் எளிதாக ன்பற்றக்கூடிய இந்த முறையால் தென்னை மகசூல் அதிகரிக்க முடியும் என விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வாழை நடவுக்கு முன் பின்பற்றப்படும் பாரிங் & பிராலினேஜ் முறை : செயல் விளக்கப் பயிற்சியை நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்!

மதுரை, மார்ச் 3

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள 18.சுக்காம் பட்டி கிராமத்தில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) கீழ், அங்குள்ள விவசாயிகளுக்காக வாழை நடவுக்கு





முன் பின்பற்றப் படும் பாரிங் (Paring) மற்றும் பிராலினேஜ் (Pralinage) முறை குறித்த கள செயல் விளக்கப் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த கள செயல் விளக்கப் பயிற்சியை ர.ம.மோத்திஷ் கிரண் இறுதி ஆண்டு மாணவர், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை சார்பில் நடத்தினார்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், வாழை நடவு செய்வதற்கு முன் நூற்புழுக்கள் மற்றும் கிழங்கு வண்டுகள் ஏற்படுத்தும் சேதங்களைத் தவிர்த்து, ஆரோக்கியமான கன்று களைப் பயன்படுத்துவதன் அவசியத்தை விவசாயிகளுக்கு களத்தில் நேரடியாக விளக்குவதாகும்.

**1. பாரிங் (Paring - செதுக்குதல்) - கள செயல் விளக்கம்**

- பயிற்சியின் முதல் கட்டமாக, வாழைக்கன்றுகளில் மேற் கொள்ளப்படும் பாரிங் முறையை விவசாயிகளுக்கு களத்தில் நேரடியாக செயல்விளக்கமாகக் காட்டப்பட்டது.

- வாழைக்கன்றின் அனைத்து வேர்களும் முழுமையாக அகற்றப்பட்டன.

- TNAU பரிந்துரையின் படி, ஆரோக்கியமான வெள்ளை நிறப் பகுதி தெளிவாகத் தெரியும் வரை செதுக்குதல் அவசியம் என்பதும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

- கிழங்கின் மேற்பகுதியில் சுமார் 15–20 செ.மீ தண்டு பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு, மீதமுள்ள தண்டு பகுதி வெட்டப்பட்டது.

- இதன் மூலம், நோய் மற்றும் பூச்சிகள் கிழங்குடன் வயலுக்குள் பரவாமல் தடுப்பதே பாரிங் முறையின் முக்கிய நோக்கம் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

**2. பிராலினேஜ் (Pralinage - களிமண் பூச்சு) - கள செயல் விளக்கம்**

● பாரிங் செய்யப்பட்ட கிழங்குகளுக்கு அடுத்த கட்டமாக, பிராலினேஜ் முறையும் களத்தில் செயல்விளக்கமாகக் காட்டப் பட்டது.

● களிமண் மற்றும் தண்ணீர் சேர்த்து, கிழங்கை முழுமையாக மூடும் வகையில் கூழ் போன்ற கலவை தயாரிக்கப்பட்டது.

● செதுக்கப்பட்ட கிழங்குகள் அந்தக் களிமண் கூழில் முழுமையாக நனைக்கப்பட்டன.

● ஈரமான கிழங்கின் மீது 40 கிராம் கார்போபியூரான் (Carbofuran 3G) குருணை மருந்து சமமாகத் தூவப்பட்டு, நூற்புழு மற்றும் கிழங்கு வண்டு கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் விளக்கப் பட்டது.

● வாடல் நோயைத் தவிர்க்க, கிழங்குகளை 0.1% கார் பென்டசிம் (Carbendazim) கரைசலில் 15 நிமிடங்கள் நனைப்பது குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

● சிகிச்சை அளிக்கப்பட்ட வாழைக்கன்றுகளை நிழலில் 24 மணி நேரம் உலர்த்திய பிறகே நடவு செய்ய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

● **பயிற்சியின் மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்ட நன்மைகள்**

**நூற்புழு கட்டுப்பாடு** : வேர் அழுகல் மற்றும் செடி சரிந்து விழுவதைத் தடுக்கிறது.

**கிழங்கு வண்டு கட்டுப்பாடு** : கிழங்குகளை வண்டுகள் துளைப் பதை திறம்படக் கட்டுப்படுத்துகிறது.

**ஆரோக்கியமான செடி வளர்ச்சி** : தொடக்க நிலையிலிருந்தே செடி வீரியமாக வளர்ந்து, அதிக மகசூல் பெற உதவுகிறது.

இந்த கள செயல் விளக்கப் பயிற்சியில் விவசாயிகள் ஆர்வத் துடன் பங்கேற்று, பாரிங் மற்றும் பிராலினேஜ் முறைகளின் நடைமுறை பயன்பாடுகளை நேரடியாகக் கற்றுக்கொண்டனர். மேலும், இந்த செயல் விளக்கத்திற்கான துண்டுப் பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இப்பயிற்சி, வாழை சாகுபடியில் தொடக்க நிலையிலேயே நோய் மற்றும் பூச்சி சேதங்களை குறைத்து, விவசாயிகளின் விளைச்சல் மற்றும் வருமானத்தை உயர்த்த உதவும் ஒரு பயனுள்ள நடவடிக்கையாக அமைந்தது.

# SRI நெல் சாகுபடி பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, மார்ச் 3

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மாணவி இந்துமதி சி.எஸ்., தனது RAWE திட்டத்தின் ஒரு பகுதியாக, போடிநாயக்கனூர் வட்டாரத்திலுள்ள பொட்டல்களம் கிராமத்தில் விவசாயிகளுக்கு System of Rice Intensification (SRI) முறையில் நெல் சாகுபடி குறித்த பயிற்சியை வழங்கினார்.

இப்பயிற்சியில், 8–12 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுகளை பயன்படுத்தி, 25 X 25 செ.மீ. இடைவெளியில் ஒரு குழியில் ஒரு நாற்று மட்டுமே நடவு செய்ய வேண்டும் என விளக்கினார். மேலும், இயற்கை உரங்களின் பயன்பாடு, கோனோ வீடர் மூலம் களை எடுப்பு மற்றும் மண் காற்றோட்டம் ஏற்படுத்துதல், தொடர்ந்து நீர் நிறுத்தாமல் மாற்றி மாற்றி பாசனம் (AWD) செய்வது ஆகியவை SRI முறையின் முக்கிய அம்சங்களாகும் என தெரிவித்தார்.

இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் நீர் சேமிப்பு, செலவு குறைப்பு மற்றும் அதிக மகசூல் பெற முடியும் என அவர் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஊரக வேளாண் அனுபவ பயிற்சியில் வேளாண் கல்லூரி மாணவிகள்

ராமநாதபுரம், மார்ச் 3

ராமநாதபுரம் மாவட்டம், பேரையூர் அருகே நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் (அருப்புக்கோட்டை) கோபால புரத்தில் 3ஜி கரைசல் பற்றிய முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் செடியின் வளர்ச்சி ஆகியவற்றை அப்பகுதி விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.



அதில் பச்சை மிளகாய் 50 g, இஞ்சி 50 g, வெள்ளை பூண்டு 50 g ஆகிய வற்றை நன்கு அரைத்த விழுதை 5mlக்கு 12 லிட்டர் தண்ணீரில் கரைத்து அதை வடிகட்டி செடிகளில் தெளித்துவந்தால் சார் உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் குறையும். இவற்றின் காரதன்மை பயிர்களிருந்து அசுவினி, மாவுபூச்சி விரட்டும். இவ்வாறு மாணவிகள் தெரிவித்தனர்.


தலைக் கவசம் உயிர்க் கவசம்



# வாழையில் கரும்பூஞ்சைக்கு மைதா கரைசல் செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி




தேனி, மார்ச் 3

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்குப்பட்ட பண்ணைப்புரம் கிராமத்தில், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையில் பயிலும் மாணவி செ.பிரியதர்ஷினி, கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டதின் ஒரு பகுதியாக வாழையில் கரும்பூஞ்சைக்கு மைதா 5% கரைசல் தயாரிப்பு, தேவையான பொருட்கள், பயன்கள் மற்றும் செய்முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

**பயன்படுத்தும் முறை :** மைதா 5% (1 கிலோ மைதா அல்லது ஸ்டார்ச்) 1 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து, பின்னர் 20 லிட்டராக கரைக்கவும். மேகமூட்டமான காலநிலையில் தெளிப்பதை தவிர்க்கவும்.

# சோளப் பயிரில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவன்

மதுரை, மார்ச் 3

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையை சேர்ந்த நான்காம் ஆண்டு படிக்கும் மாணவன் கா.சஞ்சய், கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திட்டம் (RAWE 2025-26 ) ஒட்டன்சத்திரம் குழு நடத்திய சோளப் பயிரில் வேப்ப எண்ணெய் (Neem Oil) பயன்படுத்துவது படைப் புழு, அசுவினி போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு சிறந்த

இயற்கையான வழியாகும். 5-10 மில்லி வேப்ப எண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து, சிறிது சோப்பு நீர் (Emulsifier) சேர்த்து நன்கு கலந்து, இலைகளின் அடிப்பகுதியிலும் தண்டுப் பகுதியிலும் படும்படி தெளிக்க வேண்டும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

